செ.வெ.எண்: 607 நாள். 26-09-2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிபணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

| காலிப்பணியிட விபரம் | | |
|---|---|---|
| அமைப்பாளர் | சமையலர் | சமையல் உதவியாளர் |
| 140 | 73 | 126 |

இப்பணியிடங்கள் அனைத்திற்கும் விண்ணப்பிப்பதற்கு பெண்கள் மட்டுமே தகுதியுடைவர்கள். எனவே தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும், தஞ்சாவூர் மாநகராட்சி, கும்பகோணம் மற்றும் பட்டுக்கோட்டை நகராட்சிகளிலும் உள்ள அரசு பள்ளிகள், நகராட்சி பள்ளிகள், அரசு உதவிபெறும் சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் அல்லாத பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்களில் காலிப்பணியிடங்களுக்கு இதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை தொடர்புடைய அலுவலகங்களில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். காலிப்பணியிடங்கள் விவரம் மற்றும் இன சுழற்சி விவரங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், நகராட்சி, மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் 05-10-2020 அன்று மாலை 5.00 மணிக்குள் நேரிலோ அல்லது பதிவஞ்சல் தபால் மூலமாகவோ சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் இதற்கு முன்னரே விண்ணப்பித்திருந்தாலும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் 05-10-2020 மாலை 5.00 மணிக்கு பிறகு காலதாமதமாக தபால் அல்லது நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

1.சத்துணவு மைய அமைப்பாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்

| சத்துணவு மைய அமைப்பாளர் பணியிடத்திற்கு | - | நியமன அலுவலர் - மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆவார் |
|---|---|---|
| **வ. எண்** | **விவரம்** | **அமைப்பாளர்** |
| | **கல்வித் தகுதி** | |
| 1. | பொதுபிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவினர் | 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் |
| 2. | பழங்குடியினர் | 8ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர் |
| | **வயது வரம்பு** | |
| 1. | பொது பிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவினர் | 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும் |
| 2. | பழங்குடியினர் | 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும் |
| 3. | விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் | 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும் |
| 4. | மாற்றுத்திறனாளிகள் (உடல் ஊனமுற்றோர்) | மாற்றுத்திறனாளி (உடல் ஊனமுற்றோர்) இருப்பின் அந்த அந்த இனத்திற்கு மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச வயது பூர்த்தி அடைந்தும் 43 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். |
| | **பிற தகுதிகள்** | |
| 1. | விண்ணப்பதாரர் நியமன பணியிடத்திற்கும், குடியிருப்பிற்கும் இடையே 3 கி.மீ தூரத்திற்குள் இருத்தல் வேண்டும் | |
| 2. | சத்துணவு மைய கணக்குகளை பராமரிக்க தெரிந்திருக்க வேண்டும். | |

2.சத்துணவு மைய சமையலர் (ம) சமையல் உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்

| சத்துணவு மைய சமையலர் (ம) சமையல் உதவியாளர் | - | நியமன அலுவலர் - மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ஆவார் |
|---|---|---|
| **வ. எண்** | **விவரம்** | **சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்** |
| | **கல்வித் தகுதி** | |
| 1. | பொதுபிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவினர் | சமையலருக்கு 8ம் வகுப்பு தேர்ச்சி (அல்லது) தேர்ச்சி பெறாதவராக இருக்க வேண்டும்<br>சமையல் உதவியாளருக்கு 5ம் வகுப்பு தேர்ச்சி (அல்லத) தேர்ச்சி பெறாதவராக இருக்க வேண்டும் |
| 2. | பழங்குடியினர் | சமையலர் மற்றும் சமையல் உதவியாளருக்கு எழுதப்படிக்க தெரிந்திருக்க இருக்க வேண்டும். |
| | **வயது வரம்பு** | |
| 1. | பொது பிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் பிரிவினர் | பொது பிரிவினர் மற்றும் ஆதிதிராவிடர் ஆகியோருக்கு குறிப்பிட்ட மனு செய்யப்படும் நாளன்று 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| **2.** | பழங்குடியினர் | பழுங்குடியினருக்கு மனு செய்யப்படும் நாளன்று 18 வயது பூர்த்தி அடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும் |
| **3.** | விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் | மனு செய்யப்படும் நாளன்று 20 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும் |
| **பிற தகுதிகள்** | | |
| விண்ணப்பதாரர் நியமன பணியிடத்திற்கும், குடியிருப்பிற்கும் இடையே 3 கி.மீ தூரத்திற்குள் இருத்தல் வேண்டும் | | |
| ( சத்துணவு சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு மாற்றுத்திறனாளிகளை நியமனம் செய்ய விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது | | |

**விண்ணப்பத்துடன் அனைத்து பதவிகளுக்கும் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்**

1) கல்விச்சான்றுகள் ஒளிநகல் (மதிப்பெண் பட்டியல் மற்றும் மாற்றுச்சான்றிதழ்)
2) சாதி சான்றிதழ் ஒளிநகல்
3) இருப்பிடத்திற்கான சான்றிதழ் (குடும்ப அட்டை நகல் அல்லது ஆதார் கார்டு நகல்)
4) விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்கள் இருப்பின் அதற்கான சான்றிதழ்
5) உடல் ஊனமுற்றோராய் இருப்பின் அதற்கான சான்றிதழ்
6) சுயமுகவரியிட்ட ரூ.25-க்கு அஞ்சல்தலை ஒட்டிய உறை ஒன்று

தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் நகராட்சி ஆணையர்கள் மூலம் நேர்முக தேர்விற்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படும். தகுதியற்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்விற்கான அழைப்புக் கடிதம் அனுப்பபட மாட்டாது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரும.கோவிந்த ராவ்இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.